**30.10.2025**

**MCOP.No.198/2023**
**ம.சா.1 : தேன்மொழி**
**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:-**

6) நான் எந்த வேலைக்கு செல்வதில்லை வீட்டில் தான் இருக்கிறேன். எனக்கு 1 மகன் 1 மகள். மகளுக்கு திருமணம் ஆகிவிட்டது. மகன் ஐடி கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். ரூ.80000/- மாதம் சம்பளம் வாங்குகிறார். எனது மாமியார் இறந்துவிட்டார். நான் எல்ஐசியில் வேலை எதுவும் செய்வதில்லை. எனது வீட்டுக்காரர் இறந்தபோதிலும் எனக்கு கமிஷன் வரும் என்றால் சரிதான். மேற்படி கமிஷன் எனது வங்கிக்கணக்கில் தான் வருகிறது. அது சுமார் மாதம் ரூ.10000/- வரும். எனது கணவர் உயிருடன் இருக்கும்போது ரூ.30000-40000/- வரை மாதம் வரும். மேற்படி வரும் தொகைக்கான ஆவணம் என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும். வங்கி கணக்கு புத்தகம் தாக்கல் செய்யப்படும். லாரி உரிமையாளர் விசாரிக்கும்போது எனது கணவர் மீது தான் கவனக்குறைவு தான் என்று சொல்லி உள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்துவிட்டதால் வருமானக்குறைவு ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வருமான வரி கணக்கு பட்டியலை தணிக்கை அதிகாரி தாக்கல் செய்தால் தான் ஒத்துக்கொள்ள முடியும் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது கணவர் தான் முழு காரணம் என்பதால் இந்த விபத்திற்கான நஷ்ட ஈடு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் கொடுக்க அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. லாரி ஓட்டுநருக்கு தகுந்த ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தால் மேற்படி லாரி உரிமையாளர் தான் மேற்படி விபத்திற்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2025.10.30 18:05:51 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**